


17. 02. 2026

தலைப்புச் செய்திகள்

- செயற்கை நுண்ணறிவை பொறுப்புடனும் ஆக்கப் பூர்வமாகவும் பயன்படுத்த மத்திய அரசு உறுதி பூண்டிருப்பதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.
- தமிழகத்தில் அரசு ஊழியர்களுக்கான ஓய்வூதிய திட்டத்தை நிறைவேற்ற 11 ஆயிரம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளதாக மாநில அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு சட்டப்பேரவையில் இடைக்கால நிதிநிலை அறிக்கையில் கூறியுள்ளார்.
- நிலமற்ற வேளாண் தொழிலாளர் குடும்பங்களுக்கு விபத்து இழப்பீட்டுத் தொகை 2 லட்சமாக உயர்த்தப்படும் என்று மாநில வேளாண் துறை அமைச்சர் திரு. M R K பன்னீர் செல்வம் அறிவித்துள்ளார்.
- CBSE 10, 12-ம் வகுப்பு பொதுத்தேர்வுகள் இன்று தொடங்கின.
- ATP சேலஞ்சர் டென்னிஸ் ஆடவர் இரட்டையர் காலிறுதிக்கு முந்தைய சுற்றில் யூகிபாம்ப்ரி, கொரான்ஸன் இணை இன்று களமிறங்குகிறது.

இனி விரிவான செய்திகள்

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

பிரதமர்

நாடுதழுவிய சிந்தனைகள் புதுமையான கண்டுபிடிப்புகள் உள்ளடக்கத்தை ஒருங்கிணைக்கும் ஆற்றல்மிகு கருவியாக ‘செயற்கை நுண்ணறிவு உச்சிமாநாடு’ திகழ்கிறது என்று பிரதமர் திரு.நரேந்திரமோடி பாராட்டியுள்ளார்.

உலகளாவிய நன்மைகளுக்காக செயற்கை நுண்ணறிவின் எதிர்காலத்தை வடிவமைக்கும் வகையில் செயற்கை நுண்ணறிவு கண்காட்சி அபரிமிதமான இந்திய திறமைகளை வெளிப்படுத்தி வருவதாக பெருமிதம் தெரிவித்தார்.

மனித குல வளர்ச்சிக்காக செயற்கை நுண்ணறிவை பொறுப்புடனும் ஆக்கத்துடனும் பயன்படுத்த மத்திய அரசு உறுதி பூண்டிருப்பதாக பிரதமர் எடுத்துரைத்தார்.

இந்த உச்சிமாநாட்டை முறைப்படி புதுதில்லியில் தொடங்கிவைத்து பேசிய பிரதமர் ஆக்கப்பூர்வமான தீர்வுகளுக்கு மட்டுமல்லாமல் சர்வதேச வளர்ச்சிக்கும் இம்மாநாடு பெரிதும் பங்களிக்கும் என்றார்.

சுகாதார துறையில் செயற்கை நுண்ணறிவு பயன்பாட்டிற்கான நெறிமுறைகளை அறிவித்துள்ள இணையமைச்சர் திருமதி. அனுப்ரியா பட்டேல் நாளை மறுநாள் இந்த புதிய நெறிமுறைகள் அறிமுகம் செய்யப்படும் என்றார்.

அனைத்து மாநிலங்களிலும் செயற்கை நுண்ணறிவை பொறுப்புடன் பயன்படுத்த இந்த நெறிமுறைகள் வழிகோலும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

❖❖❖❖❖❖❖❖❖❖❖

நிதிநிலை அறிக்கை

சட்டம் ஒழுங்கு சமூக நல்லிணக்கத்தை பேண முன்னுரிமை அளிப்பதன் விளைவாக அமைதியான மாநிலங்களில் ஒன்றாக தமிழகம் திகழ்கிறது என்று மாநில நிதியமைச்சர் திரு. தங்கம் தென்னரசு தெரிவித்துள்ளார்.

சட்டப்பேரவையில் 2026-27ம் நிதியாண்டிற்கான இடைக்கால நிதிநிலை அறிக்கையை இன்று தாக்கல் செய்து பேசியஅவர், உறுதி அளிக்கப்பட்ட ஓய்வூதிய திட்டத்தை நிறைவேற்ற 11 ஆயிரம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக கூறினார்.

சமூக பாதுகாப்பு ஓய்வூதிய திட்டங்களுக்கு 5 ஆயிரத்து 463 கோடி ரூபாய்,

பள்ளி கல்வித்துறைக்கு 48 ஆயிரத்து 534 கோடி ரூபாய்,

உயர்கல்வித் துறைக்கு 8 ஆயிரத்து 505 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

மாற்றுத்திறனாளிகள் நலத்துறைக்கு சிறப்பு செயலாக்கத் திட்டங்களுக்கு 17 ஆயிரத்து 88 கோடி ரூபாயும்,

இளைஞர் நலன் விளையாட்டு மேம்பாட்டுத் துறைக்கு 718 கோடி ரூபாய்

ஊரக வளர்ச்சித் துறைக்கு 28 ஆயிரத்து 687 கோடி ரூபாய்

நகராட்சி குடிநீர் வழங்கல் துறைக்கு 28 ஆயிரத்து 327 கோடி ரூபாய்

40 ஆண்டுகளுக்கு மேலான பழமைவாய்ந்த கூட்டுக்குடிநீர் திட்டங்களை சீரமைக்க 809 கோடி ரூபாய்,

நதிக்கரை மேம்பாட்டு திட்டங்களுக்கு 374 கோடி ரூபாய்

41 புதிய தொழிற்பயிற்சி நிலையங்கள் அமைக்க 291 கோடி ரூபாய்

தொழிலாளர் நலத்துறைக்கு ஆயிரத்து 996 கோடி ரூபாய்

மக்கள் நல்வாழ்வுத்துறைக்கு 22 ஆயிரத்து 90 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்றார்.

அரசு மருத்துவமனைகளில் பாதுகாப்பான பிரசவம் அளிப்பதில் தமிழ்நாடு முதலிடம் வகிப்பதாகவும்

பிரசவ உயிரிழப்புகள் தமிழகத்தில் மிகவும் குறைவு என்றும் கூறினார்.

தமிழகத்தில் தொழிற்சாலைகளில் பணிப்புரியும் பெண்கள் அதிகளவாக 41 சதவிகிதம் உள்ளதாகவும் எடுத்துரைத்தார்.

25 இடங்களில் மூத்த குடிமக்களுக்கு அன்புச்சோலை இல்லம் தொடங்கப்பட்டுள்ளது.

19 இடங்களில் தோழி விடுதிகள் திறக்கப்பட்டுள்ளது.

6 லட்சம் சுயஉதவி குழுக்களுக்கு, ஒருகோடியே 40 லட்சம் கோடி வழங்கப்பட்டுள்ளது என்றார்.

சென்னை 2-ம் கட்ட மெட்ரோ ரயில் திட்டத்திற்கு 63 ஆயிரத்து 246 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும்,

பூந்தமல்லி, போரூர், வடபழனி இடையிலான மெட்ரோ ரயில் விரைவில் பயன்பாட்டிற்கு வரும் என்றார்.

உள்துறை, மது விலக்கு ஆயத்தீர்வை துறைக்கு 15 ஆயிரத்து 111 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வறட்சி தடுப்பு பணி நடவடிக்கைகளுக்கு 110 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்றார்.

பெண்களின் பாதுகாப்பை உறுதிசெய்யும் மாநிலமாக தமிழ்நாடு உள்ளது

போதைப்பொருள் நடமாட்டத்தை ஒழிக்க கடுமையான சட்டங்களை இயற்றி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் கூறினார்

13 லட்சம் கோடி ரூபாய் தொழில் முதலீடுகள் ஈர்க்கப்பட்டுள்ளது

விடியல் பயணம்

மகப்பேறு நிதியுதவி திட்டங்களுக்கு தலா 4 ஆயிரம் கோடி ரூபாய்

போக்குவரத்து துறைக்கு 13 ஆயிரத்து 62 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது

6 ஆயிரத்து 126 கோடியில், 12 ஆயிரத்திற்கும் மேற்பட்ட புதிய பேருந்துகள் வாங்கப்படும்

21 ஆயிரத்து 132 கோடி ரூபாய் நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது

18 ஆயிரத்து 91 கோடி ரூபாய் எரிசக்தி துறைக்கு ஒதுக்கப்பட்டுள்ளது

விரைவில் புதிய ஒருங்கிணைந்த எரிசக்தி கொள்கை உருவாக்கப்படும் என்றார்.

சிறு குறு தொழில்களுக்கு ஆயிரத்து 943 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது

5 ஆயிரத்து 200 கோடி ரூபாய் செலவில் புதிய கப்பல் கட்டும் தளம் அமைக்கப்படும்

ஆதி திராவிடர் நலத்துறைக்கு 3 ஆயிரத்து 934 கோடி ரூபாயும்

பழங்குடியின மக்களின் குடியிருப்பு உள்கட்டமைப்பு மேம்பாட்டிற்கு 300 கோடி ரூபாயும்,

புதிய வீடுகள் கட்ட 755 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்றார்.

ஆயிரத்து 48 திருக்கோவில்களுக்கு சொந்தமான 8 ஆயிரத்து 363 கோடி ரூபாய் மதிப்பிலான 8 ஆயிரத்து 122 ஏக்கர் நிலங்கள் மீட்கப்பட்டு உள்ளதாக கூறினார்.

8 ஆயிரத்து 100 கோடி ரூபாய் செலவில் திருக்கோவில்களில் திருப்பணிகள் செய்யப்பட்டு 4 ஆயிரம் கோவில்களில் குடமுழுக்கு நடைபெற்று உள்ளதாகவும் கூறினார்

கல்லூரி கனவு திட்டத்தின் மூலம் 2 லட்சம் மாணாக்கர் பயன்பெற்றுள்ளனர்

சிறுபான்மையினர் நலத்துறைக்கு ஆயிரத்து 634 கோடி ரூபாய்

கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு துறைக்கு 17 ஆயிரத்து 86 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்றார்.

விவசாயிகளுக்கு 69 ஆயிரம் கோடி ரூபாய் பயிர்க்கடன் வழங்கப்பட்டுள்ளது

குத்தம்பாக்கம் புதிய பேருந்து முனையம் விரைவில் பயன்பாட்டிற்கு வரும்

கைத்தறி மற்றும் கதர் துறைக்கு ஆயிரத்து 943 கோடி ரூபாய்

நீதி நிர்வாகத்துறைக்கு 2 ஆயிரத்து 455 கோடி ரூபாய்

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறைக்கு ஆயிரத்து 634 கோடி ரூபாய்

விலையில்லா வேட்டி சேலைவ வழங்க 612 கோடி ரூபாய்

வீட்டு வசதித்துறைக்கு 7 ஆயிரத்து 547 கோடி ரூபாய்

பொதுப்பணித் துறைக்கு ஆயிரத்து 294 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக கூறினார்.

தேவாலயங்கள் மற்றும் பள்ளிவாசல்களை சீரமைக்க 20 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்றார்.

வரும் நிதியாண்டில் 11 லட்சம் கோடி ரூபாய் முன்னுரிமைதுறை கடனாக வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்.

இடைக்கால வரவு செலவு திட்டத்தில் வரியில்லாத வருவாயாக 27 ஆயிரத்து 704 கோடி ரூபாய் மதிப்பிடப்பட்டுள்ளது.

வருவாய் பற்றாக்குறை 48 ஆயிரத்து 696 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது என்றார்.

வருவாயை பெருக்கும் நடவடிக்கைகளால் 2027-28ம் நிதியாண்டுகளில் இதுகுறையும் என்றும் இதன் மூலம் கூடுதல் மூலதன செலவினத்திற்கு வழிவகை செய்யப்படும் என்றும் அமைச்சர் கூறினார்.

16-வது நிதிக்குழு பரிந்துரைகளின் படி கேரளம், கர்நாடக மாநிலங்களுக்கு வழங்கப்பட்டுள்ளதை காட்டிலும் தமிழகத்திற்கு 0.44 சதவிகிதம் என்ற மிகச்சிறிய உயர்வே வழங்கப்பட்டுள்ளதாக எடுத்துரைத்தார்.

மத்திய அரசின் திட்டங்களுக்கும் கூட நிதி ஒதுக்கப்படவில்லை என்றும் குறை கூறியுள்ளார்.

❖❖❖❖❖❖❖❖❖❖❖

வேளான் நிதிநிலை அறிக்கை

தமிழக சட்டப்பேரவையில் வரும் நிதியாண்டிற்கான இடைக்கால வேளாண் நிதிநிலை அறிக்கையை மாநில வேளாண் மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் திரு. MRK பன்னீர்செல்வம் இன்று தாக்கல் செய்தார்.

விரைவில் வேளாண் காடுகள் கொள்கை வெளியிடப்படும் என்றும்,

விபத்தில் உயிரிழக்கும் நிலமற்ற வேளாண் தொழிலாளர் குடும்பங்களுக்கு வழங்கப்படும் இழப்பீட்டு தொகை 2 லட்சமாக உயர்த்தப்படும் என்றார்.

அலைகள் திட்டத்தின் மூலம் 15 ஆயிரம் விவசாயிகளுக்கு நுண் கடன் வழங்கப்படும்

மாநிலத்தில் 31 இடங்களில் ஒருங்கிணைந்த கால்நடை பண்ணைகள் அமைக்கப்படும் என்றும் அறிவித்தார்.

அரசின் நடவடிக்கைகள் மூலம் வேளாண் உற்பத்தி அளவு 3 லட்சம் ஏக்கராக உயர்ந்துள்ளது

தொடர்ந்து 5 ஆண்டுகளாக டெல்டா மாவட்டங்களில் நெல் உற்பத்தியை அதிகரிக்க காவிரியில் உரிய நேரத்தில் தண்ணீர் திறந்துவிடப் பட்டுள்ளது என்றார்.

495 கோடி ரூபாய் செலவில் 135 நவீன சேமிப்பு கிடங்குகள் அமைக்கப்பட்டுள்ளது

இதனால் நெல் சேமிக்கும் திறன் 4 லட்சம் மெட்ரிக் டன்னாக உயர்ந்துள்ளது

நாட்டிலேயே கேழ்வரகு உற்பத்தியில் தமிழ்நாடு முதலிடத்தில் உள்ளது

சிறுதானிய இயக்கத்தின் மூலம் 12 லட்சம் விவசாயிகள் பயனடைந்துள்ளனர்

இதற்காக 178 கோடி ரூபாய் விவசாயிகளுக்கு வழங்கப் பட்டுள்ளது என்றார்.

எண்ணெய் வித்து பயிர்கள் உற்பத்தி பரப்பை அதிகரிக்க 229 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

விவசாய தொழிலாளர்களின் பற்றாக்குறையை நீக்க 77 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வேளாண் இயந்திரங்கள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது

மக்காச்சோளம் சாகுபடி 12 லட்சம் ஏக்கர் பரப்பளவாக உயர்ந்துள்ளது

78 கோடி ரூபாய் மதிப்பில் மக்காச்சோள உற்பத்தி ஊக்குவிப்பு திட்டத்திற்கு செலவிடப் பட்டுள்ளது

பழங்கள், காய்கறிகள் சாகுபடியை விரிவாக்கம் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது

496 பட்டதாரி இளைஞர்களுக்கு வேளாண் சார்ந்த தொழில்கள் தொடங்க மானியம் வழங்கப்பட்டு உள்ளது என்றார்.

விவசாயிகளுக்கு விதை மற்றும் உரங்களை வழங்க ஆயிரம் உழவர் நல மையங்கள் ஏற்படுத்தப் பட்டுள்ளதாகவும்,

மரவள்ளி கிழங்கு மற்றும் மல்லிகைப் பூ உற்பத்தியில் தமிழ்நாடு முதலிடம் வகிக்கிறது என்றார்.

சூரிய ஒளியில் இயங்கும் 4 ஆயிரத்து 150 பம்பு செட்டுகள் அமைக்கப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

மா, பலா, வாழை பயிர் பரப்பளவை அதிகரிக்கும் திட்டத்தில் 39 ஆயிரம் விவசாயிகள் பயனடைந்து உள்ளதாகவும் கூறினார்.

கொய்யா உற்பத்தியில் தமிழகம் 2-வது இடத்தில் உள்ளதாகவும்,

68 லட்சம் பனை விதைகள், 5 ஆண்டுகளில் வழங்கப் பட்டுள்ளதாகவும்,

கடந்த 5 ஆண்டுகளில் விவசாயிகளிடமிருந்து 186 லட்சம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டு உள்ளதாகவும் கூறினார்.

கொப்பர தேங்காய் ஆயிரத்து 600 கோடி ரூபாய் அளவிற்கு கொள்முதல் செய்யப்பட்டுள்ளது என்றார்.

❖❖❖❖❖❖❖❖❖❖❖

தமிழக சட்டப்பேரவை கூட்டத்தொடர் வரும் 20-ம் தேதிவரை நடைபெறும் என்று சபாநாயகர் திரு. அப்பாவு தெரிவித்துள்ளார்.

சென்னை தலைமை செயலகத்தில் இன்று நடைபெற்ற அலுவல் ஆய்வு குழு கூட்டத்தில் இதற்கான முடிவு எட்டப்பட்டது.

❖❖❖❖❖❖❖❖❖❖❖

CBSE

CBSE 10, 12-ம் வகுப்பு பொதுத்தேர்வுகள் இன்று தொடங்கின.

10-ம் வகுப்பு பொதுத்தேர்வு கணித பாடத்துடன் தொடங்கியது.

12-ம் வகுப்புகளுக்கு உயிரி தொழில் நுட்பம், தொழில்கல்வி, ஹிந்தி மற்றும் ஆங்கில மொழி சுருக்கெழுத்து பாடங்களில் தேர்வுகள் இன்று நடைபெற்றன.

நாடுமுழுவதும் 10-ம் வகுப்பு தேர்வை 25 லட்சம் மாணாக்கரும்,

12-ம் வகுப்பு தேர்வை 17 லட்சம் மாணாக்கரும் எழுதுகின்றனர்.

❖❖❖❖❖❖❖❖❖❖❖

டென்னிஸ்

கத்தாரில் நடைபெறும் ATP சேலஞ்சர் டென்னிஸ் ஆடவர் இரட்டையர் காலிறுதிக்கு முந்தைய சுற்றில் இந்தியாவின் யூகிபாம்ப்ரி, ஸ்வீடனின் கொரான்ஸன் இணை – துனீஷியாவின் மோயஸ், கத்தாரின் முபாரக் இணையை இன்று எதிர்கொள்கிறது.

❖❖❖❖❖❖❖❖❖❖❖

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.

❖❖❖❖❖❖❖❖❖❖❖